**14.10.2025**

**CC.287/2022**

**PW-1 பவுனம்மாள்**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

எனது ஊரில் 500 வீடுகள் இருக்குமா என்றால் தெரியாது. எனது வீட்டிலிருந்து தென்மேற்கு பக்கத்தில் தெற்கு வடக்காக உசிலம்பட்டி ரோடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து காவல் நிலையம் மிக அருகில் உள்ளது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு கிழமேல் தெரு என்றால் சரியல்ல. எனது வீடு வடக்கே பார்த்த வாசல் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு எதிரில் தான் எதிரிகள் வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு எதிர்த்தால் போல் போலிஸ் குவார்ட்டர்ஸ் உள்ளது, சுற்றி வீடுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது தெருவில் எனது வீடு கடைசி வீடு என்றால் சரிதான். நல்லாத்தாள், சிவராமன்வீடு எனது வீட்டு அருகே இல்லை என்றால் சரிதான். என் மகள் பாண்டிஸ்வரி பெருங்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக உள்ளார் என்றால் சரிதான். எதிரியின் மகன் தீயணைப்பு துறையில் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். என் மீது எதிரிகளை அடித்ததாக வழக்கு உள்ளது என்றால் சரிதான். நான் புகார் கொடுத்து 10 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு அபராதம் செலுத்தி உள்ளார்கள் என்றால் சரிதான். நான் புகார் எங்கு கொடுத்தேன் என்றால் காவல் நிலையத்தில் கொடுத்தேன். எந்த நேரம் எப்போது கொடுத்தேன் என்றால் எனது மகள் தான் காவல் நிலையத்திற்கு கூட்டி சென்றார். மாலை 6 மணிக்கு நான் புகார் கொடுத்தேன். புகார் யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. சாட்சி தற்போது என் மகள் தான் புகாரை எழுதினார் என கூறுகிறார். என் கண்ணுக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் எனக்கு தெரியாது. புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் புகார் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மருத்துவமனையில் தான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான்

சொன்ன மாதிரி சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று சொன்னாலும் எதிரிகள் அன்று நெல்லை தூற்றவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. அந்த வீட்டில் வேலை செய்யும் நபர்கள் தான் நெல்லை தூற்றினார்கள் என்றாலும் அது என் மேல் விழவில்லை என்று சொன்னாலும் குலுதாடியில் தான் விழுந்தது என்றாலும் சரியல்ல. வேலையாட்களை சத்தம் போட்டுக்கொண்டிருக்கும் போது எதிரிகள் வீட்டினுள் இருந்து வரும் போது நான் தான் பாண்டி மீது கல்லை கொண்டு எறிந்து அவருக்கு காயத்தை ஏற்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தான் எதிரிகளை கல்லை கொண்டு எறிந்து தாலியை அத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. நான் செய்த தவறை மறைப்பதற்காக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை.** இல்லை